# வள்ளுவன் முரசு

## கல்வி ஆண்டு 2023 - 24



அன்பிற்குரிய ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு வணக்கம்.

2023-2024 பள்ளி செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்த உங்கள் அனைவருக்கும் நன்றி. இந்தப் பள்ளி ஆண்டின் தொடக்கத்திலேயே புத்தகங்களுடன் சேர்த்து நம் பள்ளியின் முழு ஆண்டிற்கான நாட்காட்டியை வழங்கினோம். இப்பள்ளி ஆண்டில் பல புதிய செயல்பாடுகளை முன்னெடுத்தோம், அக்டோபரிலிருந்து மார்ச் மாதத்திற்குள் தமிழ்ப் பண்பாட்டுப் போட்டிகளை நடத்தினோம், தன்னார்வலர்களுக்கு வள்ளுவன் தமிழ் மையத்தின் அடையாளம் பொறிக்கப்பட்ட சட்டைகளை வழங்கினோம், இலௌடன் மாவட்ட நூலகத்திற்கு **1000+** தமிழ் நூற்களைப் பரிசளித்தோம். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயன்படும் வகையில் மேம்படுத்தப்பட்ட முன்னேற்ற அறிக்கை அட்டைகளை வழங்கினோம். முதல் நிதி திரட்டும் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்தேறியது. இவை அனைத்திற்கும் உதவிய உங்கள் அனைவருக்கும் நம் பள்ளியின் சார்பில் பாராட்டுகளும் நன்றியும்.

பனிப்பொழிவு காரணமாக பொங்கல் விழா நடைபெறவில்லை. முப்பரிமாண மாதிரிகள், சுவரொட்டிப் பலகைகள், தமிழ் தலைவர்கள் போன்ற சிறு குழந்தைகளின் மாறுவேட உடைகள் போன்ற சில திறன்காட்டும் நிகழ்ச்சிகளை அவ்விழாவில் நடத்த திட்டமிட்டிருந்தோம். நம் மாணவர்கள் பங்கேற்ற கோலம் போடும் செயல்பாட்டின் தீற்றுதிரை ஆண்டு விழா மேடையின் பின்னணியாக அலங்கரிக்கும். கின்னஸ் சாதனை புத்தகத்தில் அதிக மாணவர்கள் கலந்து கொண்ட கோலம் போடும் செயல்பாட்டின் பிரிவில் இடம் பெற விண்ணப்பிக்க முயல்வோம்.

நம் பள்ளியின் ஆண்டு விழா சிறக்க பல குழுக்களில் இணைந்து உதவி புரிந்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. வரும் கல்வியாண்டிலும் உங்கள் ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டுகிறேன். அனைவரையும் இவ்வாண்டு விழாவில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. அடுத்த ஆண்டின் சேர்க்கைப் பதிவு இணையதளத்தில் திறக்கப்பட்டு விட்டது, இப்பொழுதே பதிவு செய்யுங்கள்.

இது நமது பள்ளி, வாருங்கள் நாம் சேர்ந்து பயணிப்போம்.

**அன்புடன், இரஷ்மி பழனியப்பன் - தலைவர் – வள்ளுவன் தமிழ் மையம்.**

### வள்ளுவன் பள்ளி இசைக்குழு

வள்ளுவன் தமிழ் மையம் இந்தக் கல்வி ஆண்டில், பற்பல குழுக்களை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறது. கதை நேரம், தமிழ்த் தேனீ மற்றும் தமிழிசைக் குழுக்கள் இதில் அடங்கும். அதில் தமிழிசைக் குழுவில் மாணவர்களுக்குப் பாரதிதாசன், பாரதியார் பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டது. வயது வரம்பின்றி மாணவர்கள் மிக்க ஆர்வமுடன் இந்தக் குழு வகுப்பிற்குத் தொடர்ந்து வந்து பாடல்களை ஆர்வமுடன் பயின்றது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. இவர்களின் திறமை நம் பள்ளி விழாக்களில் வெளிக்கொணரப்பட்டது. அதுமட்டுமின்றி, சமீபத்தில் நிகழ்ந்த வாசிங்டன் தமிழ்ச் சங்க "சித்திரைத் திருநாள்" விழாக் கொண்டாட்டத்தில் நம் மாணவர்கள் இசைக் கருவிகளுடன் இந்தப் பாடல்களைச் சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் அருமையாகப் பாடி பெரும் பாராட்டைப் பெற்றனர். இதுபோல் வரும் கல்வி ஆண்டிலும் மாணவர்கள் ஆர்வமுடன் இக்குழுக்களில் சேர்ந்து தங்களின் தமிழ் ஆர்வத்தையும், திறமையையும் மெருகேற்றிக் கொள்ள விழைகிறோம்.



இதன் காணொளியைக் காண இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும்:

### பெற்றோர்களுடன் ஒரு நேர்காணல்

#### திருமதி. நிஷாந்தி கோபால்சாமி



இதன் காணொளியைக் காண இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும்:


**கேள்வி:** உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.
**பதில்:** **வணக்கம்**. என் பெயர் நிஷாந்தி கோபால்சாமி. என்னுடைய இரண்டு பிள்ளைகள் வள்ளுவன் தமிழ்ப் பள்ளியில் இடைநிலை மற்றும் இளமழலை வகுப்பில் படிக்கிறார்கள்.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ்ப் பள்ளியில் உங்களுடைய அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்.
**பதில்:** தமிழ்ப் பள்ளியில் என் பிள்ளைகள் படிப்பதால் தமிழ் நன்றாக எழுதவும், படிக்கவும், மற்றவர்களுடன் தமிழில் பேசவும் கற்றுக்கொள்கிறார்கள். தமிழ் விழாக்கள் மற்றும் பாரம்பரியம் பற்றியும் தெரிந்து கொள்கிறார்கள். அவர்களின் நண்பர்களோடு கொண்டாடுவதால் அவர்களுக்கு அதன் முக்கியத்துவம் புரிகிறது.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ் மையத்தில் உங்களுக்குப் பிடித்ததைப் பற்றிக் கூறுங்கள்.
**பதில்:** வள்ளுவன் தமிழ்ப் பள்ளி தன்னார்வலர்களால் மட்டுமே இயங்குகிறது. அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதும், தனது நேரத்தை பிள்ளைகளின் தமிழ் கல்விக்காக செலவிடுவதும் எனக்கு மிகவும் பிடித்த விடயம்.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ்ப் பள்ளிக்கு புதிதாக வரும் பெற்றோர்களுக்கு நீங்கள் ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா?
**பதில்:** புதிதாக வரும் பெற்றோர்கள் தங்களது நேரத்தை வள்ளுவன் தமிழ்ப் பள்ளியின் தன்னார்வப் பணிக்குச் செலவழிப்பதன் மூலம் வரும் சந்ததியினருக்குத் தமிழைக் கடத்த முடியும்.

#### திரு. மணி பழனிச்சாமி



இதன் காணொளியைக் காண இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும்:

**கேள்வி:** உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.
**பதில்:** வணக்கம். என் பெயர் மணி பழனிச்சாமி. என்னுடைய மனைவியின் பெயர் இந்து நாச்சிமுத்து. அவர் வள்ளுவன் தமிழ்ப் பள்ளியில் நிலை ஒன்றின் ஆசிரியராக பணிபுரிகிறார். என்னுடைய பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பு மற்றும் இளமழலை வகுப்பில் படிக்கிறார்கள்.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ்ப் பள்ளியில் உங்களுடைய அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்.
**பதில்:** நம் குழந்தைகளுக்கு இந்தியாவில் கிடைக்கும் தமிழ்க் கல்வி வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்ப் பள்ளியில் கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஆதங்கம் பெற்றோர்களுக்கு இருக்கும். வள்ளுவன் தமிழ் மையம் போன்ற பெரிய அளவில் நடத்தப்படும் கல்வி மையத்தில் தமிழ் படிக்கும் போது அவர்கள் தமிழ் கற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல் புதிய தமிழ் உறவுகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ் மையத்தில் உங்களுக்குப் பிடித்ததைப் பற்றிக் கூறுங்கள்.
**பதில்:** பள்ளியின் நிர்வாகத் திறமையும் ஒருங்கிணைப்பும் எனக்கு மிகவும் பிடிக்கும். தன்னார்வலர்கள் மட்டுமே இணைந்து தன் நேரத்தை செலவழித்து இவ்வளவு பெரிய பள்ளியை நடத்துவது சாதாரண விடயம் அல்ல. வள்ளுவன் தமிழ்ப் பள்ளி தமிழ்க் கல்வியைக் கற்றுக் கொடுப்பதிலும் தமிழ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் மிகச் சிறந்த பணியாற்றுகிறது.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ்ப் பள்ளிக்கு புதிதாக வரும் பெற்றோர்களுக்கு நீங்கள் ஏதும் சொல்ல விரும்புகிறீர்களா?
**பதில்:** நான் முன்பு கூறியது போல தமிழ் சார்ந்த அறிவும் தமிழ் உறவுகளும் கிடைப்பது வள்ளுவன் தமிழ் மையம் போன்ற பெரிய தமிழ்க் கல்வி மையத்தில் கிடைப்பது எளிது. புதிதாக வரும் பெற்றோர்கள் தன்னார்வலர் குழுவில் இணைந்து தமிழ்க் கல்விப் பணிக்கு நேரத்தை செலவிடுவது வள்ளுவன் தமிழ்ப் பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

### மாணவர்களுடன் ஒரு நேர்காணல்

#### கவின் அருண் (இளமழலை)

**கேள்வி:** வணக்கம். உங்கள் பெயர் என்ன?
**பதில்:** என் பெயர் கவின்.

**கேள்வி:** எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்?
**பதில்:** நான் இளமழலையில் படிக்கிறேன்.

**கேள்வி:** தமிழ்ப் பள்ளிக்கு ஏன் வருகிறீர்கள்?
**பதில்:** நண்பர்களைப் பார்க்க மற்றும் தமிழ் கற்க.

**கேள்வி:** உங்களுக்குப் பிடித்த தமிழ்ப் பாடல் என்ன?
**பதில்:** பாடல்...
காலை நேரம் எழுந்திரு, காலை கடனை முடித்திடு...
அம்மா அப்பா இருவருக்கும்...கடவுளை நாளும் வணங்கிடு...
கருத்தாய் பாடம் படித்திடு...

நன்றி! வணக்கம்!!



இதன் காணொளியைக் காண இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும்:

#### பாரதி (இளமழலை)

**கேள்வி:** வணக்கம். உங்கள் பெயர் என்ன?
**பதில்:** என் பெயர் பாரதி.

**கேள்வி:** நீங்கள் வள்ளுவன் தமிழ் மையத்தில் எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்?
**பதில்:** நான் இளமழலையில் படிக்கிறேன்.

**கேள்வி:** உங்களுக்குத் தமிழ் பள்ளிப் பற்றி என்ன பிடிக்கும்?
**பதில்:** நம்ம பள்ளி...

**கேள்வி:** உங்களுக்குத் தமிழ் பள்ளியில் ஏதாவது பாட்டு கற்றுக் கொடுத்து இருக்கிறார்களா?
**பதில்:** ஆமாம்...பாடல்...
குவா குவா வாத்து..... மெல்ல உடலை சாய்த்து....
மேலும் கீழும் பார்த்து.... செல்லமாக நடக்கும்...
சின்ன மணி வாத்து...

நன்றி! வணக்கம்!!



இதன் காணொளியைக் காண இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும்:

**- தொகுத்து வழங்கியவர்கள் செல்வி சம்யுக்தா கமல்ராஜ் மற்றும் செல்வன் ஸ்ரீவல்லப் ஸ்ரீராம் (இடைநிலை மாணவர்கள்)**

### சில சுவையான தகவல்கள்!!

- மண் பானை நீர் உடலுக்கு குளிர்ச்சி. இந்த நீரை வெயில் காலத்தில் பருக வேண்டும்.
- செப்பு பாத்திர நீர் உடலுக்கு சூடு தரும். இந்த நீரை மழை மற்றும் பனி காலத்தில் பருக வேண்டும்.
- அணிலின் ஆயுற்காலம் 82 வருடங்கள்.
- உலகின் பொருளாதார மன்றத்தின் தலைமையகம் – ஜெனீவா.
- திசைகாட்டி கண்டுபிடிக்கும் முன் திசையை அறிய தேவாக்கு விலங்கு என்று அழைக்கப்படும் தேவாங்கை திசையைக் காட்டும் வழிகாட்டியாக பயன்படுத்தியுள்ளனர். அது எங்கே உட்கார வைத்தாலும் வடக்கு நோக்கி தான் அமரும். அதற்கு முன் துருவ நட்சத்திரம் வைத்து திசையை கணித்துள்ளனர்.
- காலையில் வெறும் வயிற்றில் நெய் சாப்பிட்டால் செல்களின் செயல்பாட்டை அதிகரிக்கும். முடி உதிர்வைத் தடுக்கும். பக்கவாத நோயை விரட்டும். உடல் எடையைக் குறைக்கும். மூட்டு வலியைக் குணப்படுத்தும்.

### 2024-25 கல்வி ஆண்டிற்கான சேர்க்கை முன்பதிவு

அடுத்த ஆண்டு (2024-25) தமிழ்ப் பள்ளியில் சேர்வதற்கும், சேர்க்கைப் பதிவைப் பற்றிய மேலதிக தகவலைப் பெறுவதற்கும் இவ்விரைவுக் குறியீட்டினை வருடவும். **ஆரம்பகால சலுகைகள் நிறைவுபெறும் நாள் - சூலை 31!!!**

## மகாத்மா காந்தி

இந்தியாவின் "தேசத்தந்தை" என்று அழைக்கப்படும் மகாத்மா காந்தி, உலகின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர். உண்மை, நேர்மை மற்றும் அகிம்சையின் அடையாளமாகத் திகழ்ந்தவர். "மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி" என்ற இயற்பெயர் கொண்ட காந்தியைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

காந்தி, 1869-ஆம் ஆண்டு அக்டோபர்-2 அன்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்ற இடத்தில் பிறந்தார். இவரது தாய்மொழி, குஜராத்தி. இளமையில் சுமாராக படித்தாலும் நேர்மையாக இருப்பார். இங்கிலாந்து சென்று வழக்கறிஞராக படித்து, "பாரிஸ்டர்" பட்டம் பெற்று திரும்பி, மும்பையில் பணியாற்றினார். 1893-ல் வழக்கறிஞராக பணியாற்ற தென் ஆப்பிரிக்கா சென்றார்.

1924-ல் "இந்திய தேசிய காங்கிரஸ்"-ல் இணைந்தது மட்டுமல்லாமல் தலைவரானார். அவுரி விவசாயிகளுக்காக "சம்பாரண்" என்ற போராட்டத்தையும், 1930-ல் "உப்பு சத்யாகிரகம்" என்ற நடைபயணத்தையும் நடத்தினார். பின்பு 1942-ல் ஆங்கிலேயருக்கு எதிராக "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டத்தை இந்தியாவின் விடுதலைக்காக நடத்தினார்.

காந்தியடிகள் பகவத்கீதை, சமய கொள்கைகள், லியோடால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்டார்.

①

காந்தியடிகள் பழங்கள், கடலை, ஆட்டுப்பால் உண்டு வாழ்ந்தார். மேலை நாட்டு உடைகளைத் தவிர்த்தார். இந்தியாவின் காதி உடைகளையே அணிந்தார்.

இரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகளுக்கு "மகாத்மா" என்ற பட்டத்தைத் தந்தார். 1948-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 30-ம் தேதி தில்லையில், "நாதுராம் கோட்சே" என்பவரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் பிறந்த தினமான அக்டோபர்-2, "காந்தி ஜெயந்தி" என்ற பெயரில் அரசு விழாவாக அறிவிக்கப்பட்டது. காந்தியை பெருமைப்படுத்தும் வகையில் இந்தியாவின் பல இடங்களில் நினைவுச்சின்னங்கள், அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய கல்வித்திட்டத்தில் இவரது வரலாறு பாடமாகவும் உள்ளது. தனது சுயசரிதையை குஜராத்தி மொழியில் எழுதினார். தமிழில், "சத்திய சோதனை" என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது.

மகாத்மா காந்தி, "கத்தியின்றி, இரத்தமின்றி", அகிம்சை முறையில் அறப்போராட்டம் செய்து இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த மாபெரும் தலைவராவார். காந்தியடிகளின் வாழ்க்கை, ஒரு மனிதன் தன் செயலால் மகாத்மாவாக மாற முடியும் என்பதற்கு ஒரு சான்று.

கார்முகில் பரமசிவம் செந்தில் பாபு
நிலை-7 மருதம்

②

## என் தீபாவளிப் பண்டிகை

தீபாவளி என்றால் 'தீபங்களின் ஆவளி,' அதாவது, தீபங்களின் 'வரிசை' என்று பொருள், தீபாவளிப் பண்டிகையின் பின்னணி என்ன, அந்தப் பண்டிகையை நான் எவ்வாறு கொண்டாடுவேன் என்பதையும் பார்ப்போம்.

தீபாவளியின் பின்னணி :

தீபாவளி கொண்டாடுவதற்குப் பின்னணியில் பல கதைகள் உள்ளன. தென்னிந்தியாவில் நரகாசுரனைக் கண்ணன் வதம் செய்து, இருளை நீக்கி ஒளியை மீட்டதாகவும், கேரள மன்னன் "மகாபலி" தன் சாபம் நீங்கி இறைவன் அருள் பெற்று தன் மக்களைக் காண வருடந்தோறும் வரும் நாள் என்றும் இரண்டு விளக்கங்கள் கூறப்படுகின்றன.

வட இந்தியாவில் இராமர் இராவணனை வென்று அயோத்தி திரும்பிய நாள் என்றும் மேற்கு வங்காளத்தில் காளியின் அசுரனை அழித்த நாள் என்றும் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

எங்கள் தீபாவளிக் கொண்டாட்டம் :

நாங்கள் தீபாவளியை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம். அதிகாலையில் எழுந்து எண்ணெய்த் தேய்த்துக் குளித்து பிறகு புத்தாடை உடுத்துவோம். பின்னர் அம்மா செய்த தீபாவளி மருந்தைச் சாப்பிடுவோம். இந்தியாவில் இருக்கும் தாத்தா, பாட்டி மற்றும் உறவினர்களுடன் வாழ்த்து பரிமாறுவோம். பிறகு, கோவிலுக்குச் சென்று வழிபடுவோம்.

அண்டை வீட்டார் மற்றும் உறவினர்களோடு பலகாரம் பரிமாற்றம் செய்வோம். நண்பர்களோடு சேர்ந்து புசுவாணம், சரவெடி, சங்கு சக்கரம் போன்ற பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.

மாலையில் வீட்டைச்சுற்றி 'அகல்'விளக்கை ஏற்றி வைப்போம். அவ்வாறு விளக்கேற்றுவதால் நம்மைச் சுற்றி உள்ள இருள் நீங்குவது மட்டுமின்றி நம் மனதில் உள்ள தீய எண்ணங்களும் அழிகின்றன என்பது ஐதீகம்.

இவ்வாறு தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வளமுடன் எல்லோரும் வாழ்வோமாக.

நன்றி, வணக்கம்!

பெயர் : சஞ்சனா இரகுநாதன்
வகுப்பு : நிலை 7 மருதம்
ஆசிரியர்கள் : தனபாக்கியம் மாரிமுத்து
பத்மா இராசா

## கெட்ட பண்பு


அக்ஷயா
அருண்
இடைநிலை - வாகை


என்னிடமுள்ள கெட்ட பண்பு என்னுடைய சோம்பேறித்தனம். சோம்பேறித்தனம் எனக்கு நிறைய தீமைகளைக் கொடுத்தது. பள்ளிக்கு தாமதமாகத் தயாராவேன். என்னுடைய வீட்டுப்பாடத்தைத் தாமதமாகச் செய்வேன். என்னுடைய சில வேலைகளை செய்யாமல் விட்டு விடுவேன், மற்றும் என்னுடைய சில பணிகளை மறந்து போய் இருப்பேன் நான் வேலை செய்யும் போது கவனமில்லாமல் செய்வேன்.

"மடிமை மடியா ஒழுகல் குடிமையைக்
குடியாக வேண்டு பவர்,"

என்று வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப எனது சோம்பலை விட்டு சுறுசுறுப்புடன் வேலைகளைச்செய்ய விரும்புகிறேன். ஒரு அட்டவணை செய்து, அதில் இன்று நான் என்ன செய்வேன், எப்பொழுது செய்வேன் என்று இருக்கும். "வைகறை துயில் எழு," இந்த ஆத்திச்சூடி போல நான் எல்லா நாளுமே சீக்கிரமாக எழுவேன். எதைச்செய்தாலும் கவனமாகச் செய்வேன். நான் படிக்கும் போது எனக்கு கவனச்சிதறல் தரும் பொருட்களை வேறு இடத்தில் வைப்பேன்.


பூட்டிய கதவை சாவியை வைத்து திறப்பது போல, என் சோம்பேறித்தனம் என்னும் பூட்டை சுறுசுறுப்பைக்கொண்டு திறந்து மகிழ்ச்சியாக வாழ்வேன்.
































# சுவாரசியமான சம்பவம்

**முன்னுரை:**

என்னுடைய வாழ்க்கையில் பல சுவாரசியமான சம்பவங்கள் நடந்துள்ளன. அதில் எனது இந்தியப் பயணத்தின் போது நடந்த ஒரு சம்பவத்தை கூறுகிறேன்.

**உழவரும் உழவுத் தொழிலும்:**

என் தாத்தா, பாட்டியின் கிராமத்து வீட்டிற்கு கோடை விடுமுறையில் சென்றேன். உறவினர்கள் பலரையும் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்தேன். விலங்குகள், பறவைகள் பலவற்றை பார்த்தேன். சுறுசுறுப்பாக வேலை செய்யும் உழவர்கள், மாடுகளைப் பார்த்தேன்.

**நாற்று நடுதல்:**

நிலத்தில் தண்ணீருக்கு நடுவில் நின்றுக் கொண்டு நாற்று நடும் பெண்களை கண்டேன். நானும் அவர்களுடன் நீர் தேங்கிய நிலத்தில் இறங்கி நாற்று நட்டேன். சில முறை முயற்சி செய்த பிறகு என்னால் செய்ய முடிந்தது. அப்போது தான் விவசாயிகளின் கடின உழைப்பு பற்றி தெரிய வந்தது.

**முடிவுரை:**

இவ்வாறு எனது இந்தியப் பயணம் ஒரு மறக்க முடியாத பயணமாக அமைந்தது. கிராமப்புற மக்களின் வாழ்க்கை உழவர் மற்றும் உழவுத் தொழிலின் சிறப்புப் பற்றி தெரிந்துக் கொண்டேன்.

ஆராதனா அருண்

பிரியம்வதா பிரகாஷ் – இடைநிலை வாகை

# நான் செய்ய விரும்பும் வேலை

**முன்னுரை:**

இந்த உலகத்தில் சிலருக்கு பிடித்த வேலை கிடைக்கும். சிலருக்கு கிடைத்த வேலை பிடிக்கும். சிலருக்கு இரண்டுமே அமையாது. நான் செய்ய விரும்பும் வேலை தமிழ் ஆசிரியர்.

**ஏன்?**

என் மாகாணத்தில் உள்ள பள்ளிகளில் பிரெஞ்ச், கொரியன், ஸ்பானிஷ், ஜெர்மன், மற்றும் இலத்தின் கற்றுதர ஆசிரியர்கள் உள்ளனர். அந்த ஆசிரியர்களின் தாய் மொழியும் அதுவே. தாய் மொழியை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்வது எத்தனை பெருமை!

**என் ஆசை:**

எனக்கும் தாய் மொழியை அடிப்படையாக கொண்டு வேலை செய்ய ஆர்வமாக இருந்தது. ஆனால் அந்நிய நாட்டில் தாய் மொழியில் வேலை செய்ய முடியுமா? சில அமெரிக்க பல்கலை கழகங்களில் தமிழ்த்துறை இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். இருட்டு அறையில் ஒரு வெளிச்சம் தெரிகிறது என்று உணர்ந்தேன். அதனால், நான் தமிழ் ஆசிரியராக வேலை செய்ய விரும்பினேன்.

பல தமிழ் நூல்கள் படிக்க ஆரம்பித்தேன். இலக்கணம் கற்றேன். இலக்கியம் படித்தேன்.

**முடிவுரை:**

"முயற்சி திருவினையாக்கும்." என்பது போல் நான் கண்டிப்பாக தமிழ் ஆசிரியராக வேலை செய்வேன்.

## ஓர்கா

ஓர்காக்கள் என்பவை மீன்கள் அல்ல அவை பாலூட்டிகள். மீன்களுக்கு செவுள்கள் உள்ளன. அவை எப்போதும் தண்ணீரில் இருக்கும். ஆனால் ஓர்காக்கள் காற்றை சுவாசிக்க வேண்டியிருக்கும். சில சமயங்களில் அவை உணவோடு விளையாடி, பிறகு அவற்றை உண்ணும். ஆண் ஓர்காக்கள் துணையை ஈர்க்க அவற்றின் முதுகுத் துடுப்பைப் பயன்படுத்துகின்றன. பெண் ஓர்காக்கள் 22 மாதங்கள் கர்ப்பமாக இருக்கும். ஒரு குழந்தை ஓர்கா 5,000 பவுண்டுகள் எடையுள்ளதாக இருக்கும். பெண் ஓர்காக்கள் 90 வயது வரை வாழக்கூடியது. அவை சாதாரணமாக 8 மைல் வேகத்தில் நீந்தும். ஓர்கா குழுவில் பெண் தலைவர்கள் மட்டுமே இருக்க முடியும். ஓர்காக்களால் 100 மீட்டர் ஆழம் வரை மூழ்க முடியும்.

- இனியா பால்பாண்டியன் (நிலை 4 முல்லை)

## வார்த்தை தேடுதல்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரா | ஓ | பி | கு | ம | ளி | பா | ப் | ப | லா | பே |
| மு | வ் | ப | ழ | வா | ச | பூ | தை | ச் | ரீ | பே |
| ஒ | ம | ளி | அ | லா | ட் | டா | தி | ம் | வா | லா |
| டா | ட் | போ | ப் | ச | ம் | து | ழ | ட் | ழி | கொ |
| ளி | ரு | ய் | னே | ங் | டு | ய | ரே | ம | ய் | சை |
| ப் | தி | ரா | ட் | சை | ம் | னை | ழ | யா | ச் | பு |
| க | த் | று | ரு | மா | து | ள | ம் | ம் | கே | ண |
| ம | அ | ணை | ழ | ர | கை | து | வி | ள | ழை | ற |
| மு | ப் | ப | ப் | கெ | லி | சி | ச் | கி | கு | வா |
| இ | தொ | ஞ் | கு | மே | நே | லை | ழ | க | ந | ழை |

1) பப்பாளி
2) திராட்சை
3) கொய்யா
4) சப்போட்டா
5) அத்தி
6) கிச்சிலி
7) மாதுளம்
8) பேரீச்சை
9) முலாம்பழம்
10) வாழை
11) பலா
12) மாம்பழம்
13) குமளி

- சரண் நிலை-3 (அல்லி)

# தமிழோடு விளையாடு

முந்தைய விடையில் ஓர் எழுத்தை மாற்றி, குறிப்புகளைப் பயன்படுத்தி புதிருக்கான விடையைக் கண்டுபிடிக்கவும்.

கொடுக்கப்பட்ட வார்த்தை — கனவு

1. வாசலை மூட — கதவு
2. திருட்டு — களவு
3. போர்த்திடல் — களம்
4. கை — ☐☐☐
5. பாரம் — ☐☐☐
6. தகிப்பது — ☐☐☐
7. நீர் நிலை — ☐☐☐
8. தாளக் கருவி — ☐☐☐
9. பணத் தேவை — ☐☐☐
10. பாத்திரம் — ☐☐☐

**விடைகள்:-**

[illegible]

ஸ்ரீநிகா பிரிட்டோ – இடைநிலை தும்பை

## சங்க காலப் பெண்பாற் புலவர்கள் பெயர்களை கண்டு பிடிக்கவும்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெ | பா | ரி | ம | க | ளி | ர் | ஓ | தா | இ | யி |
| ள் | ண் | பு | ல் | ல | க | ங் | பு | னி | வ | சி |
| ளி | அ | ணி | ந | ல் | வெ | ள் | ளி | யா | ர் | வே |
| வீ | து | லா | க் | எ | சு | சூ | ஆ | வை | உ | தெ |
| தி | பொ | டு | க | கு | உ | ழ் | தி | பொ | பி | யோ |
| யா | ரு | மு | ண் | தெ | ய | த | ம | ன் | இ | பு |
| ர் | ப் | ன் | ணை | ச | ங் | த் | ந் | மு | எ | லி |
| ந | டு | றி | யா | க | கா | பி | தி | டி | சூ | பே |
| டை | பெ | லா | ர் | நி | ப | ச | லை | யா | ஞ் | ளை |
| தி | மா | ர் | ழ் | கு | வே | யோ | பு | ர் | ர் | இ |

- பசலையார்
- பாரிமகளிர்
- நக்கண்ணையார்
- அணிலாடு முன்றிலார்
- ஆதிமந்தி
- பொன்முடியார்
- வெண்ணிக் குயத்தியார்
- நல்வெள்ளியார்
- வெள்ளி வீதியார்

**பெயர் :** கயல்நேத்ரா எழிலரசன்

**வகுப்பு :** நிலை 5 முல்லை

## தமிழ்க் கண்காட்சி










## தெரிந்து கொள்வோம்

### இலக்கியத் தலைவர்கள் தொடர் - 3
### யார் தெரியுமா?

- பா. வேல்ராஜ்

சேர வேந்தர்களுள் சிறந்த வீரனாகிய சேரன் செங்குட்டுவன் மற்றும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை நமக்கு ஆக்கித் தந்த இளங்கோவடிகள் ஆகியோர் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அவர்களின் தந்தை பற்றித் தெரியுமா? அவன்தான் இமயமும், குமரியும் எல்லைகளாகக் கொண்டு இன்றைய இந்தியப் பெருநிலம் முழுதும் ஆண்ட பேரரசன் நெடுஞ்சேரலாதன்.

நெடுஞ்சேரலாதன் பெரும் படையுடன் வடநாடு சென்று ஆரிய அரசர்களை வென்று இமயமலையில் விற்கொடியைப் பொறித்ததால் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பெயரைப் பெற்றான். அப்போரில் யவன அரசர்களை வென்று அவர்களிடமிருந்து விலை மதிக்கமுடியாத வைரங்களையும் அணிகலன்களையும் கொண்டு வந்து குவித்து பாணர்களுக்கும் கூத்தர்களுக்கும் அவற்றை வழங்கியதாக அகநானூறு பாடல் எண் 127-ல் புலவர் மாமூலனார் பதிவு செய்துள்ளார்.

நெடுஞ்சேரலாதன் அறம் கூறும் ஆன்றோர்களையும், புலவர்களையும் பெரிதும் மதித்தான். வருபவருக்கு எல்லாம் வாரி வழங்கும் வள்ளலாகவும் விளங்கினான். அவனைப் பாடிய புலவர்கள் பரணர், மாமூலனார் , குமட்டூர்க் கண்ணனார் ஆகியோர்க்குத் தன் ஆட்சிக்கு உட்பட்ட உம்பற்காடு எனும் பகுதியில் உள்ள ஐந்நூறு ஊர்களையும் , தென்னாட்டிலிருந்து வரும் வருவாயில் ஒரு பாகத்தையும் கொடுத்தான். பெருஞ்செல்வம் படைத்திருந்ததால் இவன் செல்வக்கோ, செல்வக் கடுங்கோ, செல்வக் கோமான் என்றெல்லாம் அழைக்கப்பட்டான்.

திருப்போர்ப்புறம் எனும் இடத்தில், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் இன்னொரு மாவீரனான சோழ மன்னன் வேல் பல் தடக்கைப் பெருவிறற் கிள்ளிக்குமிடையே நடந்த கடும் போரில், இருவரும் ஒருங்கே உயிரிழந்தனர். அவர்கள் இருவரும் மார்பில் வேல் பாய்ந்து இறந்து கிடந்த காட்சியைக் கண்டு கண்ணீர் விட்டுக் கலங்கியுள்ளனர் புலவர்கள் பரணரும் கழாத்தலையாரும். மன்னர்கள் மடிந்து விட்டனரே, இனிமேல் அவர்களின் அழகிய நாடுகள் என்னாகும் என்றெல்லாம் பரணர் பாடிய பாடல் புறநானூற்றில் (பாடல் எண் 63) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு வீரத்திலும் செல்வத்திலும் சிறந்து விளங்கி, சேரன் செங்குட்டுவன் மற்றும் இளங்கோ போன்ற ஒப்பற்ற மக்களைப் பெற்று வரலாற்றில் தமிழர் பெருமையைப் பறை சாற்றிய பேரரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் புகழை நாமும் போற்றுவோம்!

### இலக்கணப் பக்கம்

-சரவணக்குமார்

வாழ்த்துகள் வாழ்த்துக்கள் – எது சரி?

தமிழ் ஆர்வலர்களிடையே வாழ்த்துகள் என்று சொல்வது சரியா அல்லது வாழ்த்துக்கள் என்று சொல்வது சரியா என்பது அடிக்கடி நடைபெறும் ஒரு விவாதம்.

“கள்” விகுதிக்கு வலிமிகுமா மிகாதா எனும் குழப்பம் வர காரணம் அதற்கென்று இலக்கண விதி இல்லாததால்தான். பின் வரும் பயன்பாடுகளைப் புரிந்து கொண்டால் இதற்கான விடை கிடைக்கும்.

வல்லினத்துடன் சேர்ந்து உ எனும் ஓசையில் முடியும் சொற்கள் குற்றியலுகரங்கள். அதாவது கு, சு, டு, து, பு, று வில் முடிபவை. இதற்கு முந்தைய எழுத்து வல்லினமாயிருந்தால் அது வன்தொடர்க் குற்றியலுகரம், மெல்லினமாயிருந்தால் அது மென்தொடர்க் குற்றியலுகரம்.

க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று - வன்தொடர்க் குற்றியலுகரம்
ங்கு, ஞ்சு, ந்து, ம்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்

பொதுவாக மென்தொடர்க் குற்றியலுகரத்தைத் தொடர்ந்து வலிமிகாது.

வன்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து ஒரு சொல் வந்தால் அப்போது வலிமிகும். உதாரணம் - கொக்குப் பறந்தது. ஆனால் கொக்குடன் “கள்” விகுதி சேர்த்து நிறைய கொக்குகளைக் குறிக்கும் போது அது கொக்குகள் என்று தான் புணரும், கொக்குக்கள் என்று புணராது. காரணம் இங்கே “கள்” என்பது தனிச்சொல் அல்ல, அது பன்மையைக் குறிக்கும் விகுதி. அதுபோல் வாழ்த்து + கள் = வாழ்த்துகள் என்றே புணரும், இங்கும் “கள்” என்பது தனிச்சொல் அல்ல என்பதால். அதேபோல் எழுத்து + கள் = எழுத்துகள்.

“கள்” விகுதியில் சில விதிவிலக்குகள் உண்டு. “ஊ” ஒலியுடன் முடியும் ஒரெழுத்து நெடில் சொல்லுடன் “கள்” விகுதி சேரும்போது வலிமிகும். உதாரணம் – பூக்கள். “உ” ஒலியுடன் முடியும் இரு குறில் எழுத்துகளால் ஆன சொல்லுடன் “கள்” விகுதி சேரும் போது வலிமிகும். உதாரணம் – பசுக்கள்.

தமிழ் அறிஞர்களிடையே மற்றொரு கருத்தும் நிலவுகிறது. வாழ்த்து என்பதே பன்மையையும் சேர்த்தே குறிக்கும் அதனால் “கள்” விகுதி சேர்க்காமலேயே நம்மால் வாழ்த்த முடியும். ஆங்கிலத்தில் “wishes” என்று சொல்வதையே நாம் தமிழ்ப்படுத்தி வாழ்த்துகள் என்கிறோம், வாழ்த்து என்பதே போதுமானது.

வள்ளுவன் முரசின் முதல் மடலுக்கு என் மனமார்ந்த வாழ்த்து.

### தமிழருவி — நம் பள்ளி என்று பாடு....

(வள்ளுவன் தமிழ் மைய வெண்பா)

வள்ளுவன் பெயர்க்கொண்டு வாஷிங்டன் பகுதியில்
தெள்ளுதமிழைச் சுவைத்து மகிழ்ந்திட - நல்ல
உள்ளங்கள் ஒன்று சேர்ந்து அமைத்தவோர்
பள்ளியிதுவென பாங்குறப் பாடு!

அள்ளிப் பருகிட செந்தமிழ்த் தேனை
துள்ளி வருகிற சின்னஞ்சிறு - பிள்ளைகள்
புள்ளி மானென கற்கவருமோர் அழகியப்
பள்ளியிதுவென பண்ணுடன் பாடு!

ஒன்று சேர்ந்து சிந்தித்த நண்பர்கள்
அன்று தொடங்கியச் சீரியப்பள்ளி - இன்று
நன்று வளர்ந்தது நற்றமிழ் சிறக்க
நன்றியோடதை நயமுடன் பாடு!

எட்டுத்திக்கும் தமிழைச் சேர்க்கத் திட்ட
மிட்டுப்பாடிய பாரதி வாக்குக்குக் - கட்டுப்
பட்டு நடக்கின்ற பள்ளி இதுவென
மெட்டுப்போட்டு பெருமையாய்ப் பாடு!

கற்க கசடறத் தாய்மொழித் தமிழை
கற்றதை மறவாது பிறர்க்கும் - கற்பிக்க
பற்றுக் கொண்டோர் முயற்சி யாலுருப்
பெற்ற பள்ளியென்றே பாடு!

### தமிழருவி — நம் பள்ளி என்று பாடு....

எண்ணம் முழுதும் என்றும் நிறைந்த
வண்ணம் திகழும் சங்கத்தமிழை - முன்னோர்
திண்ணமாய் காத்ததைப் போற்றிடும் சீர்மிகு
மண்நம் பள்ளியென்றே பாடு!

செம்மொழித் தமிழை அமெரிக்க மண்ணில்
மும்முரமாகக் கற்பிக்கும் பணியை - செம்மையாய்
எம்முரணு மின்றி சேவையாய்ச் செய்யும்
நம்மரும்பள்ளி என்றுநீ பாடு!

அன்புடன் என்றும்
இராம்ஸ் முத்துக்குமரன்.

| | |
|---|---|
| பாங்கு | - அழகு |
| தெள்ளுதமிழ் | - Elegant Tamil |
| பண் | - இசை |
| நயம் | - இனிமை |
| திண்ணம் | - உறுதி |
| மண் | - மாண் / மாட்சிமை, Greatness |
| முரண் | - மாறுபாடு |
| அரும்பள்ளி | - அருமையான பள்ளி |

### இலௌடன் மாவட்ட நூலகத்திற்கு 1000+ தமிழ் நூற்களைப் பரிசளித்த நிகழ்ச்சி




## மாணவர்களின் கோலங்கள் நிரம்பிய தீற்றுதிரையின் ஒரு பகுதி





**பதிப்பாசிரியர்கள்:**
- விஜயலட்சுமி ராமநாதன்
- சரவணக்குமார்
- மது பிரிட்டோ

**உதவி ஆசிரியர்கள்:**
- சீதா கமல்
- சு. துரை முருகன்
- சுரேகா மோகன்
- சித்ரா கமல்ராஜ்
- காயத்திரி சூரியநாராயணன்

**ஒருங்கிணைப்பு:**
- பவானி ராமநாதன்